**தலைப்பு -135 - தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கை**

---

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 293 | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,094,117,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரையும் அதில் ரூபா 2,262,862,413 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 411,424,598 மற்றும் ரூபா 419,829,989 தொகை அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 20 சதவீதம் மற்றும் 40 சதவீதமாக இருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 135 | தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 955,731,893 | 1,086,555,107 | 906,653,919 | 724,208,483 | 49,077,974 | 362,346,624 |
| 293 | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | 931,530,000 | 120,300,000 | 579,915,422 | 52,084,589 | 351,614,578 | 68,215,411 |
| | மொத்தம் | 1,887,261,893 | 1,206,855,107 | 1,486,569,341 | 776,293,072 | 400,692,552 | 430,562,035 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### (அ) மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது வருமானக் குறியீட்டிற்காக ரூபா 927,824,851 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 771,317,447 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 83 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பீடு வருமானம் | உள்ளபடியான வருமானம் | குறைவாகச் சேகரிக்கப்பட்டது. | சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் | 20.02.01.04 | 927,824,851 | 771,317,447 | 156,507,404 | 17 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்

தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான

முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 135 | 13501 | 6,000,000 | 4,497,549 | 3,000,000 | 3,066,358 | 31,000,000 | 16,603,096 |
| 293 | 29301 | 16,000,000 | 13,843,546 | 10,500,000 | 13,142,665 | 52,000,000 | 31,328,580 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) பொதுவைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 53,124,519 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு/திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | மீதி |
| தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 6000/0/0/15/47 | 1,061,211 |
| இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | 6000/0/0/15/148 | 52,063,308 |
| | | 53,124,519 |

## 2 ஆம் பகுதி

## 1. தலைப்பு 135 - தோட்டக்கைத்தொழில் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கை, என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 24 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தோட்டக்கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 08 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,660,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 12 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு ரூபா 10,606,155 தொகையானதுடன் இது அச் செலவின

விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 53 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சைக் கொண்டிருந்தன.

**(ஆ) வருமானக் கணக்கு**

வருமானக் கணக்கு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, ரூபா 300,689,703 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 04 வருட காலப் பகுதிக்கு உரித்தானவையாகக் காணப்பட்டன. இந் நிலுவை வருமானத்தை அறவிடப்பட்டமைக்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) அமைச்சால் 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 927,824,851 தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் ரூபா 771,317,447 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இதில் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தாக ரூபா 482,189,262 தொகை அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 52 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2009, 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகை வருமானத் தொகையான ரூபா 376,070,542 தொகையானதுடன் மீளாய்வாண்டின் போது இதில் ரூபா 231,888,243 தொகை அதாவது 62 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

(iv) அகலவத்தை தோட்டக் கம்பனியிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 39,069,195 தொகையான வாடகை வருமானம் சேகரிக்கப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதில் ஒரு தவணையேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 2009, 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகை வருமானத் தொகையான ரூபா 6,974,343 தொகையும் ரூபா 35,251,757 தொகையும் ரூபா 44,716,257 தொகையுமானதுடன் நிலுவையான குத்தகையை அறவிடும் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது. மேலும், குத்தகை வாடகை தாமதமானமைக்கு தாமதக் கட்டணம் அறவிடும் நடைமுறையும் அமைச்சால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) 1995 ஆம் ஆண்டின் போது அரசின் 23 பிராந்திய தோட்டக் கம்பனிகளுடன் கைச்சாத்திடப்பட்ட திருத்தப்பட்ட வாடகை உடன்படிக்கையின் படி, இவற்றில் 03 கம்பனிகளுக்குச் சொந்தமான 45 தோட்டங்களுக்காக 1994 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியன் வரை குறைவடைந்தமையின் காரணமாக குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், 2010 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி, உடபுஸ்ஸல்லாவ தோட்டக் கம்பனியின் தேறிய சொத்துக்களின் அளவு ரூபா 454 மில்லியனாலும் 2011 ஆம் ஆண்டில் ரூபா 255 மில்லியனாலும் அதிகரித்திருந்த போதிலும் அக் கம்பனியிலிருந்து குத்தகை வாடகையை அறவிடும் இயலுமை தொடர்பாக மீண்டும் கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் படி, அரசாங்கத்திற்கு அறவிடப்படக்கூடியதாக இருந்த குத்தகை வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 13501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,022,655 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) அந் நிலுவைக் கூட்டுத்தொகையான ரூபா 99,212 தொகையான 07 கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு அமைச்சிற்கு முடியாது போயிற்று.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று அமைச்சால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் மூலம் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103(1)(ஊ) | 4,602,000 | சிறிய தோட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தான ஓர் வாகனம் 2011 நவம்பர் 18 ஆம் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் ஆய்வறிக்கையின் படி 2013 திசெம்பர் 31 வரையிலும் அந் நட்டம் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப் பிரமாணம் 103(1) | 105,840 | ஓர் மோட்டார் வாகனம் 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதி விபத்திற்குள்ளான காரணத்தால் நேர்ந்த நட்டம் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப் பிரமாணம் 104(2)(3)(4) | 232,500 | 2012 யூலை 06 ஆம் திகதிய இருப்புக் கணிப்பீடு தொடர்பாக நட்ட இழப்பு அறிக்கையிடப்படுகையில் |

போதுமான அளவிலும் முழுமையான வகையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.6 நட்டங்களும் இழப்புகளும்**

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2012 ஆம்ஆண்டின் போது 04 மோட்டார் வாகனங்கள் திடீர் விபத்திற்கு உட்பட்டிருந்தமையால் ரூபா 1,656,215 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சியப் பொருட்கள் காணாமற் போனதனால் ரூபா 232,500 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**1.7 முகாமைத்துவ நலிவுகள்**

(அ) 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை அரசாங்க கம்பனிகளாக மாற்றுதல் அதிகாரச்சட்டம் மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் என்பவற்றின் கீழ் 23 பிராந்திய தோட்டக்கம்பனிகள் அமைக்கப்பட்டு அவை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான 571 தோட்டங்கள் 53 ஆண்டு காலத்திற்காக 1987 இன் 23 ஆம் இலக்க இலக்க அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை அரசாங்க கம்பனிகளாக மாற்றுதல் அதிகாரச்சட்டத்தின் மூலம் அக் கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 15 தோட்டக் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கைக்கும் கையளிக்கப்படுவதற்குரிய அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கைகளுக்குமிடையே 36 தோட்டங்களின் வேறுபாடு காணப்பட்டது.

**1.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 18 | 14 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 88 | 63 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 43 | 42 | 01 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 155 | 124 | 31 |

மீளாய்வாண்டு இறுதிவரையில் 31 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 293 - இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 24 ஆந் திகதி இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

02 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

(i) 29301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,022,774 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளில் ரூபா 103,558 தொகையான கடன் மீதி 2013 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டின் இறுதியில் திறைசேரியின் கணனி அச்சீட்டு அறிக்கைகளின் படியான மீதியும் திணைக்களப் புத்தகங்களின் படியான மீதியும் நிதிப் பிரமாணம் 427 இற்கு முரணாக இணக்கஞ் செய்யப்பட்டிராததுடன் ரூபா 2,533,476 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று திணைக்களத்தால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 – 2016 காலப்பகுதிக்கு உரித்தான கூட்டிணைந்த திட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறித்த 2.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 05 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் 2012 சனவரி 24 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 73,098,463 ஆகக் காணப்பட்டது.

**2.6 செயலாற்றல்**

2012 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் கூட்டுத்திட்டத்திற்கு இணங்காமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்கியிருக்கவில்லை.

(i) 2012 ஆம் ஆண்டின் போது 1800 ஹெக்டேயர் மீள் பயிர்ச்செய்கை செய்வதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் 1113 ஹெக்டேயர் அதாவது 62 சதவீதம் மாத்திரமே பயிரிடப்பட்டிருந்தது.

(ii) 3000 ஹெக்டேயர் புதிய பயிர்ச்செய்கையை மேற்கொள்வது மீளாய்வாண்டின் போதைய இலக்கான போதிலும் 1270 ஹெக்டேயர் அதாவது இலக்கிடப்பட்ட அளவில் 42 சதவீதம் மாத்திரமே புதிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 1025 ஹெக்டேயர் இறப்பர் மீள் நடுகை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 181 ஹெக்டேயர் அதாவது இலக்கிடப்பட்ட அளவில 18 சதவீதம் மாத்திரமே இறப்பர் மீள் நடுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது 3000 ஹெக்டேயர் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் இறப்பர் காணிகளுக்காக மழைக் கூடாரங்கள் அமைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 727 ஹெக்டேயர் அதாவது 24 சதவீதம் மாத்திரமே மழைக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

## 2.7 வங்கிக் கணக்குப் பேணலிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதி

இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விபரங்களின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| | விபரம் | 6 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவானவை | 01 வருடத்திற்கு மேல் 3 வருடங்களுக்குக் குறைவானவை | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புகள் | 19,679 | 3,600 | 23,279 |
| (ii) | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப் பட்டிராத காசோலைகள் | 447,460 | 45,513 | 492,973 |

வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காலாவதியான ரூபா 492,973 பெறுமதியான 147 காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையான வகையில் அல்லாது காணப்பட்டதுடன் அத்தகைய ஓர் சந்தர்ப்பம் பின்வருமாறாகும்.

2010 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2010/04 ஆம் இலக்க இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒட்டு இறப்பர் பயிர்களுக்காகச் செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடிய விலை ரூபா 60 ஆன போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது ஒட்டு இறப்பர் பயிரொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 85 செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி 2012 ஆம் ஆண்டின் போது ஒட்டு இறப்பர் பயிர்கள் கொள்வனவு செய்யப்படுகையில் ரூபா 653,250 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்தால்

மேற்குறித்த சுற்றறிக்கை திருத்தப்பட்டிராததுடன் வெல்லஸ்ஸ நாற்றுப்பயிர்நிலத்திலும் தனியார் நாற்றுப்பயிர் நிலங்களிலும் ஒரு பயிர் ரூபா 85 இற்குப் பெறப்பட்டு தோட்டத் துறை அமைச்சின் ஆலோசனைப் படி செயற்பட்டிராமை பணிப்பாளர் நாயகத்தால் அவரது 2013 நவம்பர் 02 ஆம் திகதிய பதிற் கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 20 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 337 | 256 | 81 |
| (iv) | ஆரம்ப நிலை | 68 | 54 | 14 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 21 | 21 | - |
| | மொத்தம் | 456 | 354 | 102 |

மீளாய்வாண்டு இறுதிவரையில் 102 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.